

முரசொலி செல்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று (10.10.2025) ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு முத்துசாமி தனது முகாம் அலுவலகத்தில் அலங்கரிக்கப்பட்ட முரசொலி செல்வத்தின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வி.சி.சந்திரகுமார் எம்.எல்.ஏ., மா.சு.ராதாகிருஷ்ணன், வீரமணி, ஆ. செந்தில்குமார், ப.க.பழனிச்சாமி, டி.எஸ்.குமாரசாமி, மாநகர செயலாளர் மு. சுப்ரமணியன், பகுதி கழக செயலாளர்கள் வில்லரசம்பட்டி ஏ. முருகேசன், அக்னி டி. சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில்

# ‘கலைமாமணி விருதுகள்’ - முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்புரையாற்றுகிறார்!

## சென்னை கலைவாணர் அரங்கில் இன்று விழா!

சென்னை, அக்.10-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாளை 2021, 2022, 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகள் மற்றும் சிறப்பு விருதுகளையும் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் கலைமாமணி விருது வழங்கும் விழா இன்று (11.10.2025 - சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெறுகின்றது.

இவ்விழாவிற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று விருதுகள் வழங்கி, மலர் வெளியிட்டு விழாப் பேருரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் - தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரியத் தலைவர் வாகை சந்திரசேகர், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் திருமதி விஜயா தாயன்பன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் 2021, 2022 மற்றும் 2023-ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதும், சிறப்பு விருதுகளாக பாரதியார் (இயல்) விருது முனைவர் ந.முருகேச பாண்டியன் அவர்களுக்கும், எம்.எஸ்.சுப்புலட்சுமி (இசை) விருது பத்ம விபூஷண் டாக்டர் கே. ஜே.யேசுதாஸ் அவர்களுக்கும், பால சரஸ்வதி (நாட்டியம்) விருது பத்மஸ்ரீ முத்து கண்ணம்மாள் அவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

இவ்விழாவில் அமைச்சர்கள், மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாலை 4 மணிக்கு “உருபாணர்” இசைக் குழுவினரின் யாழ் இசை நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

# சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ்- பா.ஜ.க.!

## ராகுல் காந்தி கடும் விமர்சனம்!



ஹரியானா, அக்.11-

சமூக விஷத்தின் அடையாளம் ஆர்.எஸ்.எஸ் மற்றும் பா.ஜ.க. என, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஹரியானா மூத்த ஐ.பி.எஸ். அதிகாரி புரன்குமார், துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம், ஒட்டுமொத்த காவல்துறை வட்டாரத்தையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளதாக நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், இந்த துயரமான சம்பவம், சாதிய பாகுபாட்டில் சமூகம் மோசமான நிலையில் இருப்பதை எதிரொலிப்பதாக வேதனை தெரிவித்துள்ளார். ஐ.பி.எஸ். அதிகாரியின் தற்கொலை, சாதிய அடிப்படையில் மனிதாபிமானம் நசுக்கப்பட்டு, ஆழமடைந்து வரும் சமூகத்தின் விஷத்தின் அடையாளம் என ராகுல்காந்தி விமர்சித்துள்ளார்.

மேலும், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மீதான தாக்குதல் குறித்தும் குறிப்பிட்டுள்ள அவர், இது போன்ற சம்பவங்கள், ஒடுக்கப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருவதையே காட்டுவதாகவும், பா.ஜ.க. மற்றும் ஆர்.எஸ்.எஸ் வெறுப்புணர்ச்சியை விதைத்து, மனுதர்மத்தை விஷத் தன்மையுடன் சமூகத்தில் பரப்பி வருவதாகவும் காட்டமாக விமர்சித்துள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் தெற்கு ஒன்றியம், பிடாகம் ஊராட்சியில் நடைபெற்ற ‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமை துவக்கி வைத்தார். உடன் மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், கோலியனூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் இ.சச்சிதானந்தம், தலைமை பொதுக்குழு உறுப்பினர் TNJ.சம்பத், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், பிடாகம் ராஜா மற்றும் பொதுமக்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் தொகுதி திருப்பத்தூர் நகராட்சி அண்ணாநகர் பகுதியில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. துவக்கி வைத்தனர்.



மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு சோழவந்தான் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கழக நிர்வாகிகள் 5968 பேருக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, மாவட்டத் துணைச் செயலாளர் ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் கழகத்தினர் திரளாக பங்கேற்றனர்.



கீழ்பென்னாத்தூர் சட்டமன்றத் தொகுதி, கீழ்பென்னாத்தூர் ஊராட்சி ஒன்றியம் சோமாசிபாடி ஊராட்சிக்குட்பட்ட புதுமை மாதா நகர், வேடநத்தம் ஊராட்சிக்குட்பட்ட எட்டு இடங்களில் பகுதிநேர நியாய விலைக் கடைகளை தமிழ்நாடு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் கு. பிச்சாண்டி பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

